## 2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான கேள்வி & பதில்கள்

**அரச இரகசிய சட்டக் கோவை என்றால் என்ன?**

1955ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க அரச இரகசியச் சட்டக் கோவை என்பது எங்களது சட்ட நூல்களில் ஒரு வழக்கற்றுப்போன சட்டமாகும் என்பதோடு அது அதிகம் விமர்சிக்கப்பட்டதும் தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வழக்கொழிக்கப்பட்ட 1911ஆம் ஆண்டின் அரச இரகசியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது எனக் கூறப்படும் ஒரு சட்டமாகும். இச்சட்டத்தின் நோக்கம் *'அரச இரகசியங்கள் மற்றும் இரகசிய ஆவணங்கள் என்பவற்றுக்கான அணுகுவழிகளை மட்டுப்படுத்துவதும் மற்றும் அவற்றின் அதிகாரமற்ற வெளிப்படுத்தல்களைத் தடுப்பதுமாகும்'*. சட்டத்தின் ஏற்பாடுகள் காலாவதியானவை கடுமையானவை மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு வழிவிடுபவை, மாற்றுக் கருத்துகளை அடக்கியொடுக்குபவை மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுபவை.

தகவல்களை ஒடுக்குவதற்கும் மற்றும் பத்திரிகையாளர்களை மிரட்டுவதற்கும் இச்சட்டத்தை உபயோகிப்பதற்கு முன்னைய அரசாங்கங்கள் அச்சுறுத்தியுள்ள சந்தர்ப்பங்களும் கூட அங்கே இருந்துள்ளன. பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றின் கீழ் இலங்கையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் முன்னர் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேளையில், உயர் பாதுகாப்பு வலங்களை ஸ்தாபிப்பதற்கு அரச இரகசியச் சட்டக் கோவையை உபயோகிப்பதானது ஒரு மோசமான முன்னுதாரணத்தையே உருவாக்குகின்றதுடன் அது சட்டத்தின் பரப்பெல்லைக்கு அப்பாற்பட்டதாகவும் உள்ளது.

**அரச இரகசியச் சட்டக் கோவையின் கீழ் என்ன செய்யப்பட முடியும்?**

அரச இரகசியச் சட்டக் கோவை பாதுகாப்பு அமைச்சர் பின்வருபவற்றை மேற்கொள்வதற்கு அனுமதிக்கிறது;

- 'தடைசெய்யப்பட்ட இடமாக' ஓரிடத்தை அறிவிப்பதற்கு,
- ஓர் அரச இரகசியத்துடன் நம்பிக்கை ஒப்படைக்கப்பட்ட ஒரு நபர் அதனை வெளிப்படுத்துவதிலிருந்து தடைசெய்கிறது, மற்றும்
- இந்த பிரதான செயற்பாடுகள் தொடர்பாக சில மேலதிக கட்டுப்பாடுகள், தவறுகள் மற்றும் நடைமுறை ரீதியான அதிகாரங்கள் என்பவற்றை உருவாக்குகின்றது.

ஒரு 'தடைசெய்யப்பட்ட இடம்' என்பது *'இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக கருதப்பட்ட அல்லது உபயோகிக்கப்படுவதற்கு இயலுமான உபகரணம், அமைப்புகள், ஸ்தாபனங்கள் அல்லது நிறுவனங்கள் என்பவற்றின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களின் சிறந்த பாதுகாத்தல்'* தேவைக்காக அறிவிக்கப்பட்ட ஒன்று எனப் பொருள்படும். இந்த நோக்கத்திற்காக தடைசெய்யப்பட்டவையாக அறிவிக்கப்படக்கூடிய இடங்களின் வகைகள் பாதுகாப்பு அமைச்சரின் கட்டளைப் பிரகாரம் *'ஏதேனும் நிலப்பரப்பு, கட்டடம், கப்பல் அல்லது விமானம்'* என்பவற்றை உள்ளடக்கலாம்.

‘தடைசெய்யப்பட்டது’ என ஓரிடம் அறிவிக்கப்பட்டதும், சட்டக் கோவையில் உள்ளடங்கியுள்ள பல கட்டுப்பாடுகள் செயல்முறைக்கு உரியவையாக வருகின்றன. அவை பின்வருவவற்றை உள்ளடக்குகின்றன;

- உத்தியோகபூர்வக் கடமையை நிறைவேற்றுவதற்கு அல்லது ஓர் அனுமதியுடன் அல்லாது அவ்வாறான ஒரு இடத்தினுள் உட்பிரவேசித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது (பிரிவு 3);
- அவ்வாறானவொரு இடத்தைக் காவல் செய்யும் உத்தியோகத்தர்களை ‘இடையூறு செய்வது அல்லது தெரிந்துகொண்டு தவறாக வழிநடத்துவது அல்லது வேறுவகையில் குறுக்கீடு செய்வது அல்லது தடை செய்வது’ ஒரு தவறாகும் (பிரிவு 4);
- ஒரு கடமையை நிறைவேற்றுதல் அல்லது அவ்வாறான இடத்தில் வதியுமொரு உத்தியோகத்தர், அல்லது ஒரு அனுமதியுடன் அல்லாது அவ்வாறான இடத்திற்குள் ஒரு ஒளிப்படக் கருவி (கமரா) அல்லது வரையும் பொருட்களை எடுத்துச் செல்வது ஒரு தவறாக அமையும் (பிரிவு 5) மற்றும்
- ‘அரசுக்குப் பாதிப்பான ஒரு நோக்கத்திற்காக’ இடத்தை அணுகுதல் அல்லது சோதனை செய்தல் அல்லது ஒளிப்படமொன்றை எடுத்தல் உட்பட, ‘உளவுபார்த்தல்’ தவறாக அமைகிறது (பிரிவு 6).

இச்சட்டத்தின் கீழ் தவறொன்று 14 வருடங்கள் வரைக்குமான கடும் சிறைத் தண்டனைகளை கொண்டதாக அமைகிறது.

**அரச இரகசியச் சட்டக் கோவையின் கீழ் ஜனாதிபதி/ பாதுகாப்பு அமைச்சர் அதி உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்க முடியுமா?**

தடைசெய்யப்பட்ட இடங்களாக சில இடங்களைக் கட்டளையிடுவதற்கு அரச இரகசியச் சட்டக் கோவை பாதுகாப்பு அமைச்சருக்கு மாத்திரமே ஏற்பாடளிக்கிறது. அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அறிவிப்பதற்கோ, அன்றேல் அவற்றின் நிர்வகித்தலுக்காக கட்டுப்பாடுகளை அளிப்பதற்கோ அல்லது கட்டளைகளை வழங்குவதற்கு அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கையளிப்பதற்கான அதிகாரத்தை சட்டம் அமைச்சருக்கு அளிக்கவில்லை. அதனால், ஜனாதிபதி/ பாதுகாப்பு அமைச்சர் அவ்வாறான கட்டுப்பாடுகளை ஆக்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை, அவை தெளிவான வகையில் அரச இரகசியச் சட்டக் கோவையின் அதிகார வரம்பை மீறியவையாகும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகாலநிலை ஒழுங்குவிதிகள் மூலமாக முன்னம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், உயர் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்துடன் பல்வேறு தீவிரமான பிரச்சினைகள் இருக்கையில், அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2 வாரங்களிற்குள் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்படல் வேண்டுமென்பதையும் மற்றும் அவ்வாறில்லையெனில், அவை செல்லுபடியற்றதாகின்றது என்பதும் மனதில் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறெனினும், இந்த ஒழுங்குவிதிகளைப் பொறுத்தவரை அவ்வாறான கவனக்குறைவு இருக்கவில்லை.

**வர்த்தமானி (2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1) என்ன செய்கிறது?**

இந்த வர்த்தமானி கொழும்புப் பிரதேசத்தில் பல பகுதிகளில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்குகிறது, அவை ஈற்றில் நகரின் ஒரு பெரும் பகுதியை உள்ளடக்குகிறது. கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன;

அ. பாராளுமன்ற வளாகம்,

ஆ. அளுத்கடைப் பிரதேசத்திலுள்ள நீதிமன்றக் கட்டட வளாகங்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம்,

இ. ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, இலங்கை கடற்படைத் தலைமையகம் மற்றும் பொலிஸ் தலைமையகம்,

ஈ. அகுரேகொட பகுதியிலுள்ள பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை இராணுவத் தலைமையகம்,

உ. ஸ்லேவ் ஐலண்ட் (கொம்பனித் தெரு) பகுதியிலுள்ள இலங்கை விமானப் படைத் தலைமையகம்,

ஊ. பிளவர் வீதியில் (மல் வீதி) அமைந்துள்ள பிரதம மந்திரி அலுவலகம்,
எ. கொள்ளுப்பிட்டிப் பகுதியிலுள்ள அலரி மாளிகை,
ஏ. பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளின் உத்தியோகபூர்வ இல்லப் பிரதேசம்.

**வர்த்தமானி (2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1) 'தடைசெய்யப்பட்ட இடங்களை' உருவாக்குகிறதா?**

சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டவாறான 'தடைசெய்யப்பட்ட இடங்கள்' வர்த்தமானியால் உருவாக்கப்பட்ட வலயங்கள் அல்ல என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். மாறாக, அவை ''உயர் பாதுகாப்பு வலயங்களாக'' விபரிக்கப்பட்டுள்ளன/ பெயரிடப்பட்டுள்ளன. ஒரு முழுமையான வலயத்தின் உருவாக்கத்தை அனுமதிப்பதாக சட்டதிலுள்ள எந்தவொரு பகுதியும் தெரிவிக்கவில்லை.

**2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அதி உயர் பாதுகாப்பு வலயங்களை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது?**

அரச இரகசிய சட்டக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் வேளையில், சட்டத்தின் கீழ் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள பரந்த அதிகாரத்தை விஞ்சும் பல விடயங்களை இந்த வர்த்தமானி செய்கிறது. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன;

- தனியே பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பாதுகாப்பதின் நோக்கத்திற்காக, சில இடங்கள் தடை செய்யப்பட்ட இடங்களாக அறிவிக்கப்படுவதற்கு மட்டும் சட்டம் அனுமதிக்கிறது, வர்த்தமானி 'அதி உயர் பாதுகாப்பு வலயங்களை' உருவாக்குகிறது.
- வலயத்தினுள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அவற்றின் அமுல்படுத்தலுக்கான கட்டளைகளை அளித்தல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு, சட்டத்தின் கீழ் 'தகுதிவாய்ந்த அதிகாரியாக' பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை அனுமதிக்கிறது (ஒழுங்குவிதி 4).
- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் ஒதுக்கப்பட்ட அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஓர் அனுமதிப் பத்திரத்துடன் தவிர, ஏதேனும் நிர்மானம் அல்லது அகழ்வு வேலையைத் தடைசெய்கிறது (ஒழுங்குவிதி 6).
- *'இந்தக் கட்டளைகளின் ஏற்பாடுகளை பொலிஸ் மா அதிபர் அமுல்படுத்துவது சட்டபூர்வமானதாகும் என்பதுடன் தேவையான போது, சில பணிகளை இயந்திர ரீதியாக மேற்கொள்வது அல்லது அந்த நோக்கத்திற்காக வேறு வகையில் அல்லது வாகனங்கள் அல்லது வேறொரு ஊடகத்தை உபயோகித்தல் கூட சட்டபூர்வமானதாகும்'* (ஒழுங்குவிதி 8 இற்கமைவாக). இவ்விரண்டும் தெளிவற்றதாக உள்ளதுடன் பொலிஸ் மா அதிபரிற்கு புதிய மற்றும் பரந்த அதிகாரங்களை இது அளிப்பதாகத் தோன்றுகிறது.
- குறித்துரைத்துச் சொல்லப்பட்ட அதிகாரங்களில் கட்டுப்பாடுகளின்றி ஒழுங்குவிதிகளின் கீழ் சோதனையிடுவதற்கும் மற்றும் விசாரணை செய்வதற்கும் பொலிஸிற்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன,
- வலயத்தினுள் இருக்கும் கட்டடங்களின் பிரதான குடியிருப்பாளர் அல்லது தொழில் வழங்குனர்கள் (அரச அல்லது தனியார்) நிரந்தரமான அல்லது தற்காலிகமான அனைத்துக் குடியிருப்பாளர்கள்/ ஊழியர்களின் பட்டியலை பொலிஸிற்கு வழங்குவதற்கு பணிக்கப்பட முடியும் (ஒழுங்குவிதிகள் 10 மற்றும் 11);
- அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சோதனைகளுக்காக வளாகத்திற்குள் நுழைவதற்கு பொலிஸிற்கு அதிகாரம் அளிக்கப்படுதல் (ஒழுங்குவிதி 12)
- அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் பட்டாசுகள் அல்லது வானவேடிக்கைகள் கொளுத்தப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

**2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 புதிய தவறுகளாகக் கருதப்படக்கூடியவற்றை உருவாக்குகிறதா?**

ஆம், சட்டக் கோவையினால் உள்ளடக்கப்படாத புதிய தவறுகளாகக் கருதப்படக்கூடியவற்றை ஒழுங்குவிதிகள் உருவாக்குகின்றன என்பதோடு இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பாதுகாப்பதுடன் அவை எந்த வகையிலும் சம்பந்தப்படாதவையாகும். 2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 இல் உள்ளடங்கியுள்ள எந்தவொரு கட்டளைகளையும் மீறுவது தவறொன்றை மேற்கொண்டதாக அமைதல் வேண்டும்.

2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1, அதன் ஏற்பாடுகளின் கீழ் கைதுசெய்யப்பட்ட எவரேனும் பிணை பெற்றுக் கொள்வதையும் கூட கடினமாக்குகிறது.

நபரொருவர் ஒரு பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட முடியுமென்பதுடன் அவ்வாறு கைதுசெய்யப்படின் மேல் நீதிமன்றத்தால் மாத்திரமே பிணை வழங்கப்பட முடியும் (ஒழுங்குவிதி 9).

**அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் இந்த வகையில் மட்டுப்படுத்தப்பட முடியுமா?**

நடமாடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றிணைதலுக்கான சுதந்திரம் உட்பட அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட முடிமென்பதுடன் அவை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அது அவசரகாலநிலை ஒழுங்கு விதிகளினாலும் மற்றும் '*தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பவற்றின் நலன் கருதி அல்லது மற்றவர்களின் உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றிற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லது ஜனநாயக சமூகத்தின் பொது சேமநலத்தின் நீதியான தேவைப்பாடுகளை திருப்தி செய்வதற்கும்* (அரசியலமைப்பின் உறுப்புரை 15 (7))' மேற்கொள்ளப்பட்டிருந்தால் மாத்திரமே ஒழுங்குவிதிகளால் இந்த உரிமைகள் மட்டுப்படுத்தப்பட முடியுமான ஒரேயொரு சந்தர்ப்பமாக அமையும். அதனால், வேறேதேனும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவதிகள் மூலமாக அடிப்படை உரிமைகளை மட்டுப்படுத்தப்பட முனைவது அனுமதிக்கப்பட முடியாததாகும்.